**2. பல நோக்காக ஓடுதல்**

**(எ-டு)** அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மைஎஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்

(நாலடியார். 172)

இது அறநெறி முதலான பல நோக்காக அமைந்தது.

**3. இடையிட்டு ஓடுதல்**

**(எ-டு)** உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு **அவிரொளி**
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் **கணவன்**

(திருமுருகாற்றுப்படை 1-6)

இத்தொடரில் மூன்றாம் அடியில் அமைந்த ஒளி என்பது பக்கத்தில் இருக்கும் தாளை நோக்காது கணவனை நோக்குதலின் இடையிட்டு நோக்குதலாக அமைந்தது. (100)

## பாக்களின் வகைகள் (4)

NOV-9 **410. ஆசிரியம்[1] வஞ்சி[2] வெண்பாக்[3] கலி[4]என**
**நால்இயற்று என்ப பாவகை விரியே.**

**(இ-ள்)** பாவகைகளை விரித்துக் கூறுமிடத்து அவை 1.ஆசிரியப்பா 2.வஞ்சிப்பா 3.வெண்பா 4.கலிப்பா என்னும் நான்குவகை இயல்பின என்று கூறுவர் புலவர்.

**பாக்கள் தொல்காப்பியர் வரிசைமுறை**

குறளடி முதல் கழிநெடிலடி ஈறாகிய பதினேழ் நிலத்திலும் வருதல்; இனிய ஓசையுடைமை; மிகுந்த அடிகளைக் கொண்டிருத்தல் என்பவற்றால் தொல்காப்பியர் ஆசிரியப்பாவை முதலில் கூறினார். இவ்ஆசிரியப்பாவை அடியொட்டியும் ஆசிரியப்பாவைப் போல இறுதியையும் உடையது வஞ்சிப்பா. எனவே அதனை இரண்டாவதாகக் கூறினார். அகவல் ஓசையிலிருந்து மாறுபட்ட செப்பலோசைக்குரிய வெண்பாவை மூன்றாவதாகக் கூறினார். வெண்பாவிற்குரிய சீர் மிகுதியாக வருதல், வெண்பாவைத் தனக்கு உறுப்பாகப் பெற்று வருதல் என்பவற்றால் கலிப்பாவை இறுதியாகக் கூறினார் எனத் தொல்காப்பியரின் வரிசைமுறைக்குக் காரணம் கூறுகிறார் இளம்பூரணர்.

பிற்காலத்தார் பாக்களை வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என நான்காக வரிசைப்படுத்துவர். அவற்றிற்குரிய காரணங்களையும் இளம்பூரணர் விரிவாக எடுத்துரைக்கிறார்.

**வெண்பா:** பிறதளை மயங்காமல் வருதல்; அளவடியான் வருதல்; **அந்தணர்** தன்மை கொள்ளல் என்பவற்றால் இது முதலில் கூறப்பட்டது.

**ஆசிரியப்பா:** ஆசிரியத் தளையோடு பிறதளையும் பெறுதல்; அளவடி பெறுதல்; இனிய ஓசை உடைத்தாதல்; மிகுந்த அடிகளில் வருதல்; **அரசரின்** தன்மை பெறுதல் ஆகியவற்றால் இது இரண்டாவதாகக் கூறப்பட்டது.

**கலிப்பா:** அளவடி பெறுதல்; கலித்தளையோடு பிற தளைகளையும் பெறுதல்; **வணிகர்** தன்மை பெறுதல் என்னும் காரணங்களால் இது மூன்றாவதாக வைக்கப்பட்டது.

**வஞ்சிப்பா:** குறளடி, சிந்தடிகளைப் பெறுதல், பலதளையும் விரவி வருதல்; **வேளாளர்** தன்மை பெறுதல் ஆகியவற்றால் வஞ்சிப்பா நான்காம் இடத்தைப் பெற்றது என்பது அவர்தம் விளக்கம். *(101)*

### பாடுபொருள்கள் (3)

**411. அந்நிலை மருங்கின் அறம்முத லாகிய**
**மும்முதல் பொருட்கும் உரிய என்ப.**

**(இ-ள்)** மேற்கூறப்பட்டவை ஆசிரியம் முதலாகிய நான்கு பாக்களாகும். அப்பாக்கள் **1.அறம் 2.பொருள் 3.இன்பம்** என்னும் மூன்று முதற்பொருள்களையும் எடுத்துரைப்பதற்கு உரியன என்று சொல்லுவர் புலவர். *(102)*

### பாக்களின் தொகை (2)

**412. பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்**
**ஆசிரி யப்பா[1] வெண்பா[2] என்றாங்கு**
**ஆஇரு பாவினுள் அடங்கும் என்ப.**

**(இ-ள்)** பாக்கள் விரித்துக் கூறப்பட்ட தன்மையால் நான்கு ஆயின. அவற்றின் பண்புநலன்களை ஆராயும் நிலையில் அவை **1.ஆசிரியப்பா 2.வெண்பா** என இரண்டாகத் தொகுத்துக் கூறப்படும். இவ்விரு பாக்களுக்குள் எஞ்சிய **வஞ்சிப்பாவும் கலிப்பாவும்** அடங்கும் என்று சொல்லுவர் புலவர். *(103)*

### வஞ்சி, கலிப்பாக்களின் நடை

**413. ஆசிரிய நடைத்தே வஞ்சி[1]; ஏனை**
**வெண்பா நடைத்தே கலி[2]என மொழிப.**

**(இ-ள்)** *1.*ஆசிரியப்பாவின் நடையினை ஒத்து நடப்பது வஞ்சிப்பாவாகும் 2.மற்றொன்றாகிய வெண்பாவின் நடையினை ஒத்து நடப்பது கலிப்பாவாகும் என்று சொல்லுவர் புலவர்.

நடை என்றது ஈண்டுச் சாயலைக் குறிக்கும். இதனையே இளம்பூரணர் இயலும் திறம் என்று குறிப்பிடுகிறார். (104)

**வாழ்த்திற்குரிய பாக்கள் (4)**

**414. வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே.**

**(இ-ள்)** ஆசிரியப்பா முதலான நான்கு வகைப் பாக்களுக்கும் வாழ்த்திப் பாடுதல் என்பது பாடுபொருளாக அமையும்.

**விளக்கம் :** 1.தேவரை வாழ்த்திப் பாடுதல் 2.முனிவரை வாழ்த்திப் பாடுதல் 3.ஏனையோரை வாழ்த்திப் பாடுதல் என வாழ்த்து மூவகைப்படும் என்பர் இளம்பூரணர். (105)

**புறநிலை வாழ்த்துக்குரியவை (2) - வெண்பா, ஆசிரியப்பா**

**415. வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்**
**பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து**
**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே**
**கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.**

**(இ-ள்)** நின்னால் வழிபடப்படும் தெய்வம் உன்னைப் புறத்தே நின்று எந்த இடையூறும் வராமல் பாதுகாப்பதாக. நீ பெறுகின்ற பழியற்ற செல்வம் உனக்கே அன்றி உன் தலைமுறையினருக்கும் பொருந்தும்படி சிறந்த புகழினைப் பெற்று வாழ்க என வாழ்த்துவது புறநிலை வாழ்த்தாகும். இவ்வாழ்த்து கலிப்பா வகையிலும் வஞ்சிப்பா வகையிலும் இடம்பெறாது.

**விளக்கம் :** தெய்வத்தைப் புறத்தே நிறுத்தி வாழ்த்துவது புறநிலை வாழ்த்தாகும். இவ்வாழ்த்து வெண்பா, ஆசிரியப்பா, இரண்டும் கலந்த மருட்பா என்னும் மூவகைப் பாக்களுக்கும் உரியதாகும். (106)

**கலி, வஞ்சிக்கு ஆகாத பொருள்கள் (3)**

**416. வாயுறை வாழ்த்தே[1] அவைஅடக் கியலே[2]**
**செவியறி வுறூஉ[3] என அவையும் அன்ன.**

**(இ-ள்)** 1.வாயுறை வாழ்த்து 2.அவை அடக்கியல் 3.செவியறிவுறூஉ என்பன பாடுபொருள்கள். இவை முற்கூறப்பட்ட புறநிலை வாழ்த்தைப் போல் கலிப்பாவிலும் வஞ்சிப்பாவிலும் இடம்பெறுவதில்லை.

**விளக்கம் :** இம்மூவகைப் பொருண்மைகளும் ஆசிரியப்பா, வெண்பா, மருட்பா என்னும் மூவகைப் பாக்களுக்கு மட்டுமே உரியவை. (107)

## வாயுறை வாழ்த்தின் இலக்கணம்

வாயுறை

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.

(பொ-ள்) வேம்பும் (கசப்பு) கடுக்காயும் (துவர்ப்பு) உண்ணும்போது ...றுப்பனவாய் அமையும்; உண்ட பின்னால் உடம்பிற்கு மிகுந்த ...மை பயக்கும். அதுபோல இடித்துரைக்கும் வெஞ்சொல்லானது ...ம்போது பொறுக்க முடியாததாய்த் தோன்றும். ஆயினும் அச்சொல் ...னால் பயன் தருவதோடு பாதுகாப்பாயும் அமையும் என்னும் ...ன்மையை அறிவுறுத்துவதாகும். தெளிவாக ஆராய்ந்து பார்க்கும் ...லையில் வாயுறை வாழ்த்து இத்தன்மையதாகும்.

...க்கம் : ஒருவருக்குச் சொல்லாகிய அறிவுரை மருந்தால் நன்மை ...தோன்றும்படி பாடுவது வாயுறை வாழ்த்தாகும். **வாய் - வாய்மொழி; ...றை - மருந்து; சொல்மருந்து.** வேம்பும் கடுக்காயும் கசப்புச் சுவையும் ...வர்ப்புச் சுவையும் உடையன. எனவே அவை உண்ணும்போது துன்பம் ...ரும். பின்னர் அவை உடலுக்குப் பெரும் நன்மையைச் செய்யும். ...துபோலப் பெரியோர் கூறும் அறிவுரையாகிய சொல் அப்போது ...செவிக்குக் கசப்பாய்த் தோன்றும். ஆயினும் அது பின்னர் உயிருக்கு ...உறுதியளிப்பதோடு மறுமைக்குப் பாதுகாப்புத் தருவதாய் அமையும். ...இதுவே வாயுறை வாழ்த்து மருட்பாவின் இயல்பாகும். **(எ-டு)**

இருங்கடல் உடுத்தஇப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே ஆண்ட ஏமம் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
அதனால், நீயும் கேண்மதி யத்தை வீயாது
உடம்பொடு நின்ற உயிரும் இல்லை
மடங்கல் உண்மை மாயமோ அன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலுள் ஆங்கண்
உப்பிலாஅ அவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்காது
இழிபிறப்பினோன் ஈயப்பெற்று
நிலம்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே

செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் துறந்தே. (புறநானூறு. 363)

இப்பாடல் நிலையாமையைக் கூறி நிலைத்த புகழ் அடைவதற்குரிய நெறியை அறிவுறுத்துவதாகும். (108)

**அவை அடக்கியலின் இலக்கணம்**

**418. அவைஅடக் கியலே அரில்தபத் தெரியின்**
**வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மின்என்று**
**எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந்து அன்றே.**

**[இ-ள்]** கற்றறிந்த அவையோர் முன் அறியாதவற்றைச் சொல்லி உள்ளேன். ஆயினும் அவற்றைப் பாகுபடுத்தி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவையில் உள்ளோர் அனைவரையும் வழிபட்டுத் தாழ்ந்து கேட்டுக் கொள்வது அவையடக்கியலாகும். இதுவே குற்றமற ஆராய்ந்து பார்க்குமிடத்து அவையடக்கியலின் தன்மையாகும். (109)

**செவியுறையின் இலக்கணம்**

**419. செவியுறை தானே,**
**பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்**
**அவிதல் கடன்எனச் செவியுறுத் தன்றே.**

**[இ-ள்]** பெரியோர் குழுமியிருக்கும் இடம் சான்றோர் அவையாகும். அச்சான்றோர் நடுவில் அவர்களுக்குக் கட்டுப்பட்டுத் தற்புகழ்ச்சியும் சினமும் இன்றி அடங்கி நடத்தலைக் கடமையாகக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்துவர். இதுவே செவியுறை வாழ்த்தின் இலக்கணமாகும்.

அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மைஎஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல். (நாலடியார். 172)

பெரியோர் வாய்ச்சொல்லைக் கேட்க வேண்டும் என்று அறிவுறுத்துவதால் இது செவியுறை வாழ்த்தாயிற்று. செவியுறை - செவிக்கு அறிவுறுத்துவது. *(110)*

**பாக்களுக்குரிய அடி வரையறை**

**420. ஒத்தா ழிசையும்[1] மண்டில யாப்பும்[2]**
**குட்டமும்[3] நேரடிக்கு ஒட்டின என்ப.**

**[இ-ள்]** *1.*ஒத்தாழிசைக் கலிப்பாவின் உறுப்பாக விளங்குவது **ஒத்தாழிசைகள்** *2.*ஆசிரியப்பாவின் வகைகளாக விளங்குபவை **நிலை மண்டிலம், அடிமறி மண்டிலம்** என்பவையாகும் *3.*கலிப்பாவிற்குரிய

முதன்மை உறுப்பாக விளங்குவது குட்டம் என்னும் தரவு ஆகும். இவை அனைத்தும் நான்கு சீர்களைக் கொண்ட அளவடியால் ஆகி வரும் என்று சொல்லுவர் புலவர்.

**விளக்கம் :** நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயலடி முச்சீரால் வரும். இணைக்குறள் ஆசிரியப்பாவில் 2, 3, 5, 6 எனச் சீர்கள் இடம்பெறும். ஆயினும் **நிலைமண்டிலம், அடிமறி மண்டிலம்** ஆகியவற்றின் அனைத்து அடிகளும் நாற்சீர்களைக் கொண்ட அளவடியாக மட்டுமே வரும். எனவே அவை இரண்டும் மண்டில யாப்பு எனத் தனித்துக் கூறப்பட்டன.

கலிப்பாவில் அமையும் வெண்பாச் சுரிதகத்தின் **ஈற்றடி** முச்சீரால் வரும். ஆசிரியச் சுரிதகத்தின் **ஈற்றயலடி**யும் முச்சீரால் வரும். கலிக்கு உறுப்பாகிய அம்போதரங்கம் 2, 3 சீரால் வரும். தனிச்சொல் ஒருசீராக வரும். இக்கருத்துப் பற்றியே தரவு அளவடியால் நடைபெறும் என்று தொல்காப்பியர் தனியே கூறினார் என இளம்பூரணர் விளக்கமாக எடுத்துரைக்கிறார். (111)

**தரவு (குட்டம்) – முச்சீர்**

**421. குட்டம் எருத்தடி உடைத்தும் ஆகும்.**

**(இ-ள்)** கலிப்பாவின் முதல் உறுப்பாக விளங்குவது தரவு. இதன் ஈற்றயலடி முச்சீரால் வருவதும் உண்டு.

குட்டம் என்பதனைத் தரவு கொச்சகமாகிய கொச்சக ஒருபோகிற்கு வழங்குவதும் பொருந்துவதாகும். (112)

**மண்டிலம், குட்டம் – செந்தூக்கு** NOV-11

**422. மண்டிலம்[1] குட்டம்[2] என்றுஇவை இரண்டும்**
**செந்தூக்கு இயல என்மனார் புலவர்.**

**(இ-ள்)** 1.மண்டிலமாகக் கூறப்படும் பாவகை நிலைமண்டிலம் 2.குட்டம் தரவு எனக் கூறப்படும் பாவகை ஆகிய இரண்டும் செந்தூக்காகிய அகவலோசையின் இயல்பினை உடையவை என்று சொல்லுவர் புலவர்.

இதுவரை கூறிய விதிகளின்வழி ஆசிரியப்பாவிற்கும் வஞ்சிப்பாவிற்கும் இலக்கணம் ஓதப்பட்டது. அதன் காரணமாக இவற்றிற்குரிய இலக்கணத்தை இளம்பூரணர் தொகுத்துக் கூறுகிறார்.

**ஆசிரியப்பாவின் இலக்கணம்** : பெரும்பான்மை இயற்சீர்; ஆசிரிய உரிச்சீர் என்னும் சீர்களைப் பெற்று வருதல். ஆசிரியத் தளையையும் அகவலோசையையும் நாற்சீரடியையும் பெற்று வருதல். பிற சீரானும் தளையானும் அடியானும் வருவது ஆசிரியப்பாவிற்கு உரிய இலக்கணமாகும். இவ்வாசிரியப்பா நேரிசை, இணைக்குறள், நிலைமண்டிலம், அடிமறி மண்டிலம் என நான்கு வகைப்படும்.

**நேரிசை ஆசிரியப்பா:** ஈற்றயலடி முச்சீரால் வருவது. (எ-டு)

முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே.

**இணைக்குறள் ஆசிரியப்பா:** இடையிடை முச்சீர் வருதல். (எ-டு)

நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே.

**நிலைமண்டில ஆசிரியப்பா:** எல்லா அடியும் நாற்சீராய் ஒத்து வருதல்.

(எ-டு) வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே. (குறுந்தொகை.18)

**அடிமறி மண்டில ஆசிரியப்பா:** அளவொத்த ஏதேனும் ஓர் அடியை முதலும் முடிவுமாக மாற்றி ஒலித்தாலும் ஓசையும் பொருளும் மாறாதது.

(எ-டு)

சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் எனினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே.

## வஞ்சிப்பாவின் இலக்கணம்

வஞ்சிஉரிச்சீரானும் ஏனைச் சீரானும் இருசீரடியானும் முச்சீரடியானும் வருதல். தூங்கலோசை உடையதாய்த் தனிச்சொல்லைப் பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் முடிதல். இது இருசீரடி (குறளடி) வஞ்சிப்பா, முச்சீரடி (சிந்தடி) வஞ்சிப்பா என இருவகைப்படும்.

## குறளடி வஞ்சிப்பா

(எ-டு) பூந்தாமரை போதலமரத்
தேம்புனலிடை மீன்திரிதரும் ....
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்
மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்தல் ஆனாப் பெருவண் மையனே.

இது தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிந்த வஞ்சிப்பா.

ஐந்தடி வஞ்சிப்பா

(எ-டு) கொடிவாலன கருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரன
....
திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி எளிதே.

இது ஆசிரியச் சுரிதகத்தால் முடிந்த முச்சீரடி வஞ்சிப்பா.

## வெண்பாவின் வகைகள் (5) (113)

423. **நெடுவெண் பாட்டே[1] குறுவெண் பாட்டே[2]**
**கைக்கிளை[3] பரிபாட்டு[4] அங்கதச் செய்யுளோடு[5]**
**ஒத்தவை எல்லாம் வெண்பா யாப்பின.**

**(இ-ள்)** 1.நெடுவெண்பாட்டு 2.குறுவெண்பாட்டு 3.கைக்கிளை 4.பரிபாடல் 5.அங்கதம் ஆகியவையும் இவற்றை ஒத்த பிறவும் வெண்பா யாப்பை உடையனவாகும்.

**1.நெடுவெண்பாட்டு:** நான்கு அடிகளால் அமைவது சமநிலை வெண்பா. அதனினும் மிகுந்ததாய்ப் பல அடிகளை உடைய பாட்டு.

**2.குறுவெண்பாட்டு:** நான்கு அடிகளால் அமையும் சமநிலை வெண்பாவினும் குறைந்த அடிகளைக் கொண்ட பாட்டு.

**3. கைக்கிளை:** இது பொருண்மையால் பெற்ற பெயர். ஒருதலைக் காதலாகிய கைக்கிளைப் பொருண்மையில் பாடப்பெறும் வெண்பாக்கள் கைக்கிளையாகும்.

**4.பரிபாட்டு:** பரிந்த பாட்டு. இது ஒரு வெண்பாவாக வருவதன்றிப் பல உறுப்புகளைப் பெற்றுத் தொடர்ந்து பாட்டாகி முற்றுப் பெறுவது.

**5.அங்கதச் செய்யுள்:** வசைப் பொருளுடைய பாட்டு.

### வெண்பா யாப்பின் இலக்கணம்

வெண்சீரானும் இயற்சீரானும் வெண்டளையானும் செப்பலோசையானும் அளவடியானும் ஈற்றடி முச்சீரானும் வருவது வெண்பா யாப்பாகும் என விளக்குகிறார் இளம்பூரணர்.

**நெடுவெண்பாட்டு:** அளவின் நெடிய பாட்டு. அதாவது ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டுப் பன்னிரண்டு அடிவரை வருவது. இதனைப் பிற்கால யாப்பியலார் பஃறொடை வெண்பா எனக் கூறுவர். **(எ-டு)**

சேற்றுக்கால் நீலம் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுஉறழ் மொய்ம்பின் பகழி பொருகயல்
தோற்றம் தொழில்வடிவு தம்முள் தடுமாற்றம்
வேற்றுமை இன்றியே ஒத்தன மாவடர்
ஆற்றுக்கால் ஆட்டியர் கண்.

இது ஐந்தடியான் வந்த இன்னிசைப் பஃறொடை வெண்பா.

பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னொடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே; பொன்னோடைக்கு
யானைநன்று என்றாளும் அந்நிலையள்; யானை
எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்.

இது ஆறடியான் வந்த நேரிசைப் பஃறொடை வெண்பா.

**குறுவெண்பாட்டு:** அளவில் குறுகிய பாட்டு. இது இரண்டடியானும் (குறள் வெண்பா) மூன்றடியானும் (சிந்தியல் வெண்பா) வரும்.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை. (குறள்.37)

இரண்டடியும் ஒரு தொடையால் வந்த குறள் வெண்பா.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னார் உடைத்து. (குறள்.667)

விகற்பத் தொடையால் வந்த விகற்பக் குறள் வெண்பா.

**சிந்தியல் வெண்பா**

நறுநீல நெய்தலும் கொட்டியும் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டிர் அடி.

இது ஒத்த ஒரு தொடையான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண்டு ஆர்ப்பப் புடைத்தாளே - பொன்தேரான்
பாலைநல் வாயில் மகள்.

வேறுபட்ட தொடையான் வருதலின் நேரிசைச் சிந்தியல் வெண்பா.

**சமநிலை வெண்பா:** நான்கடியால் வருவது.

அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று. (நாலடியார்.1)

இது நேரிசை வெண்பா.

**கைக்கிளை:** கைக்கிளைப் பொருண்மையில் பாடப்படுவது.

பொன்னார மார்பில் புனைகழற்கால் கிள்ளிபேர்
உன்னேனென் றூழ்உலக்கை பற்றினேற் - கென்னோ
மனனோடு வாய்எல்லாம் மல்குநீர்க் கோழிப்
புனல்நாடன் பேரே வரும்.

**அங்கதம்:** பழித்துக் கூறுவது.

தந்தை இலைச்சுமடன் தாய்தொழிலி தான்பார்ப்பான்
எந்தைக்(கு) இதுஎங்ஙனம் பட்டதுகொல் - முந்தை
அவிஉணவி னார்தெரியின் ஆவதாம் கொல்லோ
கவிகண்ண னார்தம் பிறப்பு.

பழித்துக் கூறுவதால் வசை ஆயிற்று. (114)

424. கைக்கிளை தானே வெண்பா ஆகி
ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே.

(இ-ள்) காமப் பொருண்மை உடையது கைக்கிளை ஆகும். இது வெண்பா வகையால் முழுமையாக அமைவதும் உண்டு. மேலும் முதல் இரண்டு அடியும் வெண்பாவினால் அமைந்து கடை இரண்டு அடியும் ஆசிரியப்பாவினால் முடிவு பெறும் மருட்பாவிலும் அமையும்.

விளக்கம் : இவ்வாறு ஆசிரியப்பாவும் வெண்பாவும் கலந்து வருவது மருட்பா ஆகும். இதனைக் கைக்கிளை மருட்பா என்பர். (எ-டு)

உரவொலி முந்நீர் உலாய்நிமிர்ந் தன்ன
கரவரு காமம் கனல - இரவெதிர
முள்ளெயி றிலங்கு முகிணகை
வெள்வளை நல்காள் வீடுமென் உயிரே. (பு.வெ.மாலை. கைக்கிளை.9) (115)

## பரிபாடலின் இலக்கணம்

425. பரிபா டல்லே தொகைநிலை வகையின்[1]
இதுபா என்னும் இயல்நெறி இன்றிப்[2]
பொதுவாய் நிற்றற்கும் உரித்துஎன மொழிப[3].

(இ-ள்) 1.பரிபாடல் என்பது பலவகை உறுப்புகளையும் தொகையாகக் கொண்டது 2.ஒருங்கு தொக்க தன்மை வகையால் இன்னவகைப் பா என்னும் வரையறுக்கப்பட்ட இலக்கண நெறியைப் பொருந்தாதது 3.எல்லாப் பாவிற்கும் பொதுவாய் நிற்றற்கு உரியது என்று சொல்லுவர் புலவர்.

விளக்கம் : ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலிப்பா, மருட்பா என்னும் அனைத்துப் பாக்களின் உறுப்புகளையும் தனக்கு உறுப்பாகக் கொண்டு வரும் தன்மை கொண்டது பரிபாடலாகும். இக்கருத்துப் பற்றியே இன்ன பா என உணரப்படாமல் எல்லாப் பாவிற்கும் பொதுவாக வரும் தன்மை பரிபாடலுக்குக் கூறப்பட்டது. (116)

## பரிபாடல் - உறுப்புகள் (4)

426. கொச்சகம்[1] அராகம்[2] சுரிதகம்[3] எருத்தொடு[4]
செப்பிய நான்கும் தனக்குஉறுப் பாகக்
காமம் கண்ணிய நிலைமைத்து ஆகும்.

(இ-ள்) பாக்கள் அனைத்திற்கும் பொதுவாய் நிற்பது பரிபாடல். அவ்வாறு நிற்கும் தன்மையோடு 1.கொச்சகம் 2.அராகம் 3.சுரிதகம் 4.எருத்து (தரவு) என்னும் நான்கையும் தனக்கு உறுப்பாகக் கொண்டு வரும். காமப் பொருண்மையைப் பாடுவதற்கு உரியதாய் அமையும்.

**விளக்கம் :** பாக்களுக்குரிய பாடுபொருள்கள் மூன்றனுள் அறம், பொருளாகிய இரண்டும் பரிபாடலில் இடம்பெறுவதில்லை, காமப் பொருண்மையாகிய இன்பத்தோடு கடவுள் வாழ்த்தாகியும் வரும்.

**உறுப்பு விளக்கங்கள்**

**1. கொச்சகம்:** ஒரு ஆடையை மடித்து மடித்துக் கொசுவுவது கொச்சகம். அதுபோலப் பல குறட்பாக்கள் அடுக்கப்படுவது கொச்சகம் என்னும் உறுப்பாகும். இது இருசீர் அடுக்கி வரும். ஆசிரியம், வெண்பா, வஞ்சி, கலி, சொற்சீர், முடுகியல் என்னும் அறுவகை அடியாலும் அமைந்த பாக்களை உறுப்பாகப் பெற்று வரும். வெண்பாவின் இயல்பால் வெளிப்பட்டுத் தோன்றும்.

**2.அராகம்:** குற்றெழுத்துகள் மிகுந்துவர அமையும் அடி அராகம் ஆகும். இது இரண்டடியாலும் பல அடியாலும் வரும். இதன் எல்லை ஆறடி.

**3. சுரிதகம்:** பாடலில் இறுதியாக வரும் உறுப்பு சுரிதகம் ஆகும். பாட்டிற்குரிய பொருளை முடித்து நிற்பது (முடிவுரை). இதற்கு **அடக்கியல்** என்னும் வேறுபெயரும் உண்டு. இது ஆசிரியப்பாவின் இயல்பினையோ வெண்பாவின் இயல்பினையோ கொண்டு முடியும்.

**4.எருத்து:** இது தரவு என்னும் உறுப்பைக் குறிப்பதாகும். பாட்டிற்கு முகமாக நிற்பது (முன்னுரை). இவ்வுறுப்பு வெண்பாவினைப் போல் அமைந்து இரண்டடிச் சிற்றெல்லையாகவும் பத்தடிப் பேரெல்லையாகவும் வரும்.

பரிபாடலில் மலையும் ஆறும் ஊரும் சிறப்புற வருணித்துக் கூறப்படும். (117)

## பரிபாடலுக்குரிய அடிகள் (2)

**427. சொற்சீர் அடியும்[1] முடுகியல் அடியும்[2]**
**அப்பா நிலைமைக்கு உரிய ஆகும்.**

**[இ-ள்]** 1.சொற்சீரடி 2.முடுகியல் அடி என்னும் இரண்டும் முற்கூறப்பட்ட பரிபாடலுக்கு உரிய அடிகளாகும்.

**விளக்கம் :** சொல்லே சீராக வரும் அடி சொற்சீரடி ஆகும். முடுகியலடி ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியானும் குற்றெழுத்துப் பயின்று வர அமைக்கப்படுவது என்பர் இளம்பூரணர். (118)

## சொற்சீரடியின் இலக்கணம் (5)

**428. கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்தும்[1]**
**முற்றடி இன்றிக் குறைவுசீர்த்து ஆகியும்[2]**
**ஒழியசை ஆகியும்[3] வழியசை புணர்ந்தும்[4]**
**சொற்சீர்த்து இறுதல்[5] சொற்சீர்க்கு இயல்பே.**

(இ-ள்) 1.உரைநடை வகையாகிய கட்டுரையில் சொல்வதைப் போல எண்ணுதல் பொருளொடு பொருந்தி வருதல் 2.நாற்சீரடியாய் இல்லாமல் இரண்டு அல்லது மூன்று சீர்களைக் கொண்ட அடியால் வருதல் 3.இறுதிச்சீர் ஒன்றும் இரண்டும் அசை குறைந்து வருதல் 4.ஒரு சீரில் பிறிதொரு சீர் வரும்படியாகத் தொடுக்காமல் ஓரசை வரும்படி தொடுத்தல் 5.ஒரு சொல்லே சீராகும் தன்மையைப் பெற்றிருத்தல் என்பவை சொற்சீர் அடிக்கு உரிய இயல்புகளாகும். (119)

**அங்கதத்தின் வகைகள் (2)**

**429. அங்கதம் தானே அரில்தபத் தெரியின்**
**செம்பொருள்[1] கரந்தது[2] எனஇரு வகைத்தே.**

(இ-ள்) வெண்பா யாப்பில் இயற்றப்படுவது அங்கதம் ஆகும். குற்றமற ஆராயுமிடத்து அவ்வங்கதம் 1.செம்பொருள் அங்கதம் 2.பழிகரப்பு அங்கதம் என இருவகைப்படும். (120)

**செம்பொருள் அங்கதம்**

**430. செம்பொருள் ஆயின் வசைஎனப் படுமே.**

(இ-ள்) வெளிப்படையாகப் பழித்துரைப்பது செம்பொருளாகிய அங்கதம் ஆகும். அது வசை என்ற பெயரினைப் பெறும்.

**விளக்கம் :** ஒருவரை இழிவுபடுத்திக் கூறுவது வசை ஆகும். இழிவுபடுத்திப் பழித்துரைக்கும் நிலையில் ஒருவரின் பழிச்செயல்களை மறைக்காமல் வெளிப்படுத்திக் கூறுவது வசை அல்லது செம்பொருள் அங்கதம் என்று கூறப்படும். (121)

**பழிகரப்பு அங்கதம்**

**431. மொழிகரந்து மொழியின்அது பழிகரப்பு ஆகும்.**

(இ-ள்) வசையை வெளிப்படையாகச் சொல்லாமல் அதனை மறைத்து வேறொரு சொல்லால் சொல்வர். இவ்வாறு கூறுவது பழிகரப்பு அங்கதம் ஆகும். (122)

**செய்யுள் வகை – பொது (2)**

**432. செய்யுள் தாமே இரண்டுஎன மொழிப.**

(இ-ள்) பொதுவாகச் சொல்லப்பட்ட செய்யுள் வகைகள் இரண்டு வகைப்படும் என்று சொல்லுவர் புலவர்.

**விளக்கம் :** 1.செவியுறைச் செய்யுள் 2.அங்கதச் செய்யுள் என்பன செய்யுள் வகைகளாகும். (123)

### செவியுறைச் செய்யுளின் இலக்கணம்

433. புகழொடும்[1] பொருளொடும்[2] புணர்ந்தன்று ஆயின்
செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர்.

(இ-ள்) 1.புகழ்ந்து போற்றும் தன்மை 2.அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப்பொருள் புலப்பட நிற்றல் ஆகியவற்றைப் பொருந்த வரப் பாடல்கள் இயற்றுவர். அவற்றைப் புலவர்கள் செவியுறைச் செய்யுள் என்று கூறுவர். (124)

### அங்கதச் செய்யுளின் இலக்கணம்

434. வசையொடும்[1] நசையொடும்[2] புணர்ந்தன்று ஆயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்.

(இ-ள்) 1.பழித்துரைக்கும் தன்மையாகிய வசை 2.அவ்வசை மொழியால் அன்பு பொருந்தக் கூறுதல் என்னும் தன்மைகள் பொருந்தி வரச் செய்யுள் செய்வர். அவற்றை அங்கதச் செய்யுள் என்று சொல்லுவர் புலவர். (125)

### கலிப்பாவின் வகைகள் (4)

435. ஒத்தா ழிசைக்கலி[1] கலிவெண் பாட்டே[2]
கொச்சகம்[3] உறழொடு[4] கலிநால் வகைத்தே.

(இ-ள்) 1.ஒத்தாழிசைக்கலி 2.கலிவெண்பாட்டு 3.கொச்சகக்கலி 4.உறழ்கலி எனக் கலிப்பா நான்கு வகைகளைக் கொண்டதாகும். (126)

### ஒத்தாழிசைக் கலிப்பா வகைகள் (2)

436. அவற்றுள்,
ஒத்தா ழிசைக்கலி இருவகைத்து ஆகும்.

(இ-ள்) மேற்கூறப்பட்ட கலிப்பாவின் வகைகள் நான்கு. அவற்றுள் முதலாவதாக இருப்பது ஒத்தாழிசைக் கலி. அது இரண்டு வகைகளை உடையதாகும். அவை 1.நேரிசை ஒத்தாழிசைக்கலி 2.தேவரைப் பராவும் ஒத்தாழிசைக்கலி என்பனவாகும். (127)

### ஒத்தாழிசைக் கலிப்பாவின் உறுப்புகள் (4)

437. இடைநிலைப் பாட்டே[1] தரவு[2] போக்கு[3] அடை[4] என
நடைநவின்று ஒழுகும் ஒன்றுஎன மொழிப.

(இ-ள்) 1.இடைநிலைப்பாட்டு (தாழிசை) 2.தரவு 3.போக்கு (சுரிதகம்) 4.அடை (தனிச்சொல்) என்பன நான்கு. இந்நான்கு உறுப்புகளையும் கொண்டு நடக்கும் செய்யுள் கலிப்பாவில் ஒருவகை என்று கூறுவர் புலவர்.